செய்தி வெளியீடு எண்.727 நாள். 4.9.2008

## நான்காம் கட்டமாக 40 இலட்சம் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டம்!

## சட்டமன்ற கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய குழுவின் 12–வது கூட்டத்தில் உலகளாவிய ஒப்பந்தப் புள்ளிகள் கோர முடிவு!

## முதலமைச்சர் கலைஞர் அறிவிப்பு!

இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்குவது குறித்து அமைக்கப்பட்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையிலான சட்டமன்றக் கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய குழுவின் 12 வது கூட்டம் 4.9.2008 அன்று மாலை தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின், சட்டமன்றக் கட்சிகளின் பிரதிநிதிகள் திரு.சி.கோவிந்தசாமி (இந்திய கம்யூனிஸ்ட் மார்க்ஸிஸ்ட்), திரு வை.சிவபுண்ணியம், சட்டமன்ற கட்சித் தலைவர், (இந்திய கம்யூனிஸ்ட்), திரு. எச். அப்துல் பாசித், சட்டமன்ற உறுப்பினர், (இந்திய யூனியன் முஸ்லீம் லீக்), திரு.மு. ஜெகன் மூர்த்தி, சட்டமன்ற கட்சித் தலைவர் (புரட்சி பாரதம்) மற்றும் திரு.ரவிகுமார், சட்டமன்ற உறுப்பினர் (விடுதலைச் சிறுத்தைகள்) ஆகியோரும், தலைமைச் செயலாளர் திரு. கே.எஸ். ஸ்ரீபதி, இ.ஆ.ப., நிதித் துறைச் செயலாளர் திரு. கு.ஞானதேசிகன், இ.ஆ.ப., தகவல் தொழில்நுட்பத் துறைச் செயலாளர் திரு.சி. சந்திரமௌலி, இ.ஆ.ப., வருவாய்த் துறைச் செயலாளர் திரு. அம்புஜ் சர்மா, இ.ஆ.ப., வருவாய் நிர்வாக ஆணையர் திரு. சக்தி காந்த தாஸ், இ.ஆ.ப.. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை செயலாளர் திரு.தீனபந்து,இ.ஆ.ப. ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டம் அண்ணா பிறந்த பொன்னாளான 15.9.2006 அன்று தொடங்கி வைக்கப்பட்டு முதற்கட்டமாக 30 ஆயிரம் இலவச வண்ணத் தொலைக்காட்சி பெட்டிகளும், அதனைத் தொடர்ந்து இரண்டாவது கட்டமாக 25 இலட்சம் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளும் வழங்கப்பட்டன.

**தொடர்ந்து 2007–2008 ஆம் ஆண்டில் 34 இலட்சத்து 25 ஆயிரம் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் கொள்முதல் செய்திட முதலில் ஆணைகள் வெளிடப்பட்டு, பின்னர் மேலும் 3 இலட்சத்து 25 ஆயிரம் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் கொள்முதல் செய்திடவும் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. இதன் மூலம் மூன்றாம் கட்டத்தில் மொத்தம் 37 இலட்சத்து 50 ஆயிரம் இலவச வண்ணத் தொலைக்காட்சி பெட்டிகளைக் கொள்முதல் செய்திட விதிமுறைகள்படி 10 நிறுவனங்களுக்கு ஆணை வழங்கப்பட்டு, 31.8.2008 வரை 24 இலட்சத்து 58 ஆயிரத்து 492 இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் பொது மக்களுக்கு வழங்கப்படுவதற்காக மாவட்ட ஆட்சியர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 12 இலட்சத்து 91 ஆயிரத்து 508 இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளும் 2008 டிசம்பருக்குள் அளிக்கப்பட்டு விடும்.**

**இன்று நடைபெற்ற சட்டமன்றக் கட்சிகளின் பிரதிநிதிகள் அடங்கிய கூட்டத்தில், தமிழக அரசின் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கும் திட்டத்தின்கீழ் நான்காம் கட்டமாக இந்த ஆண்டில் (2008–2009) 40 இலட்சம் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளைக் கொள்முதல் செய்வதற்காக 2008 செப்டம்பர் மாதத்தில் உலகளாவிய ஒப்பந்தப் புள்ளிகள் கோருவது என்றும், 2008 அக்டோபர் மாத மத்தியில் ஒப்பந்தப் புள்ளிகளைத் திறப்பது என்றும், அக்டோபர் இறுதியில் ஒப்பந்தப் புள்ளிகளை முடிவு செய்வது என்றும், 2009 ஜனவரி தொடங்கி டிசம்பர் வரை 40 இலட்சம் இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளையும் வழங்குவது என்றும்,**

**இத்திட்டத்தில் மூன்றாம் கட்டமாக இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகளை வழங்குதற்கு முடிவுகள் மேற்கொண்ட போது நிர்ணயிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி நெறிமுறைகள் மற்றும் தொலைக்காட்சிப் பெட்டிகளுக்கான தொழில் நுட்பக் குறியீடுகளையே தற்போதைய நான்காம் கட்ட கொள்முதலுக்கும் பின்பற்றுவது என்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.**

**.......................................................................**

**வெளியீடு**: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.